செய்தி வெளியீடு எண்: 1101 நாள் 15.12.2010.

## தமிழகத்தில் தொடர் வடகிழக்குப் பருவமழையினால் பாதிக்கப்பட்டுள்ள மாவட்டங்களில்

## மத்திய அரசின் குழுவினர் சுற்றுப்பயணம்

### முதன்மைச் செயலர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையர் தகவல்

தமிழகத்தில் நவம்பர் மாதத் தொடக்கத்திலிருந்து வடகிழக்குப் பருவமழை காரணமாகப் பாதிக்கப்பட்டுள்ள திருவாரூர், நாகப்பட்டினம், தஞ்சாவூர், கடலூர், விழுப்புரம், கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் ஏற்பட்டுள்ள சேதங்களை பார்வையிட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விடுத்து வேண்டுகோளினை ஏற்று, மத்திய அரசின் சார்பில் மத்திய உள்துறை அமைச்சகத்தின் இணைச் செயலரும் இக்குழுவினரின் தலைவருமான திரு.எல். விசுவநாதன் அவர்கள் தலைமையிலான ஏழு உயர் அலுவலர்கள் அடங்கிய குழுவினர் நாளைய தினம் (16.12.2010) நண்பகல் சென்னைக்கு வருகிறார்கள்.

இரண்டு குழுக்களாக பிரிக்கப்பட்டு, ஒரு குழுவினர் கடலூர், நாகப்பட்டினம் தஞ்சாவூர் மற்றும் திருவாரூர் ஆகிய மாவட்டங்களிலும், இரண்டாவது குழுவினர் கன்னியாகுமரி, திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி ஆகிய மாவட்டங்களிலும் வரும் 17, 18 மற்றும் 19.12.210 ஆகிய நாட்களில் பார்வையிட்டு, சேதங்களை மதிப்பீடு செய்யவுள்ளார்கள்.

**உறுப்பினர்கள் விவரம்**

1. திரு. எல். விசுவநாதன், இணைச் செயலர் மத்திய உள்துறை அமைச்சகம்

2. திரு. கே. மனோகரன், இயக்குநர் பொறுப்பு மத்திய வேளான்மைத்துறை

3. திரு. முரளிதரன், முதுநிலை ஆராய்ச்சி அலுவலர் மத்திய திட்டக்குழு

4.திரு. ஜிதேந்திர குமார், உதவி நிருவாக அலுவலர், மத்திய நிதி மற்றும் செலவீனத்துறை

5. திரு. திக் விஜய் மிஷ்ரா, கண்காணிப்பு பொறியாளர் மத்திய தரைவழி போக்குவரத்து மற்றும்நெடுஞ்சாலைத்துறை

6. திரு. ஆர். தங்கமணி, கண்காணிப்பு பொறியாளர், மத்திய நீர் வள ஆணையம் மற்றும் ஆதாரத்துறை

7. திரு. அமலன் மஜூம்தார் துணை இயக்குநர், மத்திய ஊரக வளர்ச்சித்துறை

ஓம் முனைவர் ந. சுந்தரதேவன் இ.ஆ.ப.,
முதன்மை செயலர்/ வருவாய் நிருவாக ஆணையர்,
எழிலகம், சென்னை 5.

வெளியீடு–இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், செ–9.